ආයතනයේ නම : ජාතික සත්වෝද්‍යාන දෙපාර්තමේන්තුව

පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක 119 (4) යටතේ ගරු අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම.

**நிறுவனத்தின் பெயர்:** தேசிய மிருகக்காட்சிசாலைகள் திணைக்களம்

பாராளுமன்றத்திக் அரசகணக்குக் குழவினால் முன்வைக்கப்பட்டஅறிக்கைதொடர்பாகநிலையியற்கட்டளைஇலக்கம் 119(4) இன் கீழ் கௌரவஅமைச்சரின் அவதானிப்புக்களும் மற்றும் அதுதொடர்பாகஎடுக்கப்படும் நடவடிககைகளும் பாராளுமன்றத்திற்குசமர்ப்பித்தல்

**Name of the institution: Department of National Zoological Gardens**

Submission of observations of Hon. Minister and steps taken with regard to the reports tabled by the Committee on Public Accounts in terms of Standing Order No 119 (4)

பாராளுமன்ற கூட்டத்தொடர் இலக்கம் : 183

நிறுவனத்தின் பெயர் : தேசிய மிருகக்காட்சிசாலைகள் திணைக்களம்

| | நிதிச் ஒழுங்கு விதிகள் மற்றும் செயலாற்றுகை மதிப்பீட்டின் பிரகாரம் அடையாளங் காணப்பட்ட குறைபாடுகள் | அது தொடர்பாக எடுக்கப்பட்ட செயற்பாடுகள் மற்றும் அவற்றின் தற்போதைய நிலை |
|---|---|---|
| | முதலாவது பகுதி | |
| 01. | ஆளுக்கான வேதனாதிகள் பதிவேடு/ வேதனாதிகள் பதிவேட்டு அட்டைகள் இற்றைவரைப் படுத்தப்பட்டு பேணப்படவில்லை. | 2022 ஆண்டிலிருந்து ஆளுக்கான வேதனாதிகள் பதிவேடானது சம்பளம் வழங்கப்படும் மாதத்திலேயே இற்றைவரைப்படுத்தப்பட்டுள்ளது. |
| 02. | உள்ளக கணக்காய்வு விசாரணைகளுக்கான விடைகள் ஒரு மாத காலப்பகுதியினுள் சமர்ப்பிக்கப்படவில்லை. | உள்ளக கணக்காய்வு விசாரணைகளுக்கான விடைகள் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் ஒரு மாத காலத்தினுள் வழங்கப்பட்டுள்ளதுடன் சில சந்தர்ப்பங்களில் உப அலுவலகங்களிலிருந்து விடைகளை தருவித்துக் கொள்ளும் போது தாமதம் நிகழ்ந்துள்ளது. 2023 ஆண்மடில் இந் நிலையைத் தவிர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத் தருகின்றேன். |
| 03. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் ஆகக் குறைந்தது இரண்டு (2) தடவைகளாவது நடத்தப்படவில்லை. | 2020 ஆண்டில் திணைக்களத்தினால் 2020.07.29 ஆந் திகதி கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டமொன்று நடாத்தப்பட்டுள்ளது. 2020 ஆம் ஆண்டில் நாட்டில் நிலவிய கொரோனா பெருந்தொற்று நிலை மற்றும் உள்ளக கணக்காய்வாளர் திடீர் விபரத்துக்கு ஆளாகியமையின் காரணமாக 4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடத்த முடியமற் போயின. அவ்வாறே கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட DMA/AMC/A/2020/5-4 இலக்கமுடைய மற்றும் 2020.06.11 ஆந் திகதிய கடிதம் மூலம் DMA/01-2019 சுற்றறிக்கையின் 5 ஆம் பந்தியை நிறைவேற்ற வேண்டிய தேவையிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது என்பதை மேலும் அறியத் தருகின்றேன்.<br>இன்றளவில் DMA/01-2019 சுற்றறிக்கைக்கு அமைய ஓராண்டில் 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு திணைக்களத்துக்கு உரியதான முக்கிய விடயங்கள் கலந்துரையாடப்படுகின்றன என்பது பற்றியும் அறியத் தருகின்றேன். |

| | | |
|---|---|---|
| 04. | 2016.03.31 ஆந் திகதிய 5/2016 இலக்கமுடைய அரச நிதிச் சுற்றறிக்கைகளுக்கு அமைய பொருட் கணிப்பீட்டின் போது வெளிப்படுத்தப்பட்ட மிகை, பற்றாக்குறை தொடர்பான சிபார்சு களும், ஏனைய சிபார்சுகளும் குறித்த காலப்பகுதியினுள் நடைமுறைப் படுத்தப்படவில்லை. | 2020 ஆண்டில் நிலவியகொரோனா பெருந்தொற்று நிலைக்கு மத்தியில் பொருட் கணிப்பீட்டுப் பணிகளை குறித்த காலப்பகுதியினுள் பூர்த்தி செய்ய இயலவில்லை. 2020 மற்றும் 2021 ஆண்டுகளுக்குரியதான 02 உப அலுவலகங்களது ஏலவிற்பனை நடவடிக்கைகள் இன்றளவில் முடிவுறுத்தப்பட்டுள்ளதுடன் 2022 ஆண்டின் கணிப்பீட்டு பணிகள் நிறைவடைந்தவுடனே ஏனைய நிறுவனங்களின் ஏலவிற்பனைப் பணிகளை முடிவுறுத்துவதற்கு எதிர்பார்க்கப்படும் என்பது பற்றி மேலும் அறியத் தருகின்றேன். |
| 05. | பயன்படாற்று காணப்பட்ட வாகனமொன்று 6 மாதகாலத்தை விட குறைவான காலப்பகுதியினுள் அப்புறப்படுத்தப்படவில்லை. | அப்புறப்படுத்தப்பட வேண்டிய வாகனங்களை மதிப்பீடு செய்வது தொடர்பாக குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்த போதிலும், இன்றளவில் நாட்டினுள் நிலவுகின்ற பொருளாதார நெருக்கடி நிலை காரணமாக புதிய வாகனங்களைக் கொள்வனவு செய்வது இடைநிறுத்தப்பட்டுள்ளதன் காரணமாக அப்புறப்படுத்துவதாக கருதப்பட்ட வாகனங்களில் திருத்தங்களை மேற்கொண்டு மீண்டும் பயன்படுத்துவதற்கு ஏற்ற நிலைக்கு மாற்றியமைக்கும்படி கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களின் போது கலந்துரையாடப்படுள்ளதனால் இன்றளவில் அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதகின்றது என்பது பற்றியும் தயவுடன் அறியத் தருகின்றேன். |
| 06 | வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களிலிருந்து வெளிப்படுத்தப் பட்ட சீராக்கப்பட வேண்டியிருந்த மீதிகள் சம்பந்தமாக நி.பி. அமைய ஒரு மாதகாலத்தினுள் தீர்க்கப் படவில்லை. | 2020 ஆண்டில் நிலவிய கொரோனா பெருந்தொற்று நிலைக்கு மத்தியில் அவ் ஆண்டில் நிறுவனமானது அதிக காலம் மூடப்பட்டிருந்தமையும், தபால் சேவைகள் செயற் படாற்றிருந்தமையும் காரணமாக வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களிலிருந்து வெளிப்படுத்தப்பட்ட சீராக்கப்பட வேண்டிய மீதிகள் சம்பந்தமாக ஒரு மாத காலப்பகுதியினுள் நடவடிக்கை எடுக்க முடியாமற் போனதுடன், இன்றளவில் அவ் அனைத்து சீராக்கங்களும் சரிசெய்யப்பட்டுள்ளது என்பதை தயவுடன் அறியத் தருகின்றேன். அவ்வாறே இன்றளவில் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களில் இருந்து வெளிப்படுத்தப்படும் சீராக்கங்களை ஒரு மாத காலத்தினுள் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்பது பற்றியும் மேலும் அறியத் தருகின்றேன். |
| 07. | ஓராண்டினை விட அதிக காலமாக தொடர்ந்து வரும் நிலுவைக் கடன் மீதிகள் காணப்பட்டன. | ஓராண்டினை விட அதிக காலம் தொடர்ந்து வரும் கடன் மீதிளிலிருந்து சாட்சிகளுடனான கடன் மீதிகளை சாட்சிகளிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், சாட்சிகளின்றிய கடன் மீதிகளை அறவிடுவது தொடர்பாக தாபனவிதிக் கோவைக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்பது பற்றியும் அறியத் தருகின்றேன். |

| | | |
|---|---|---|
| 08. | நி.பி. 371 இற்கமைய வெளியிடப்பட்ட பல்பணி இடைக்கால கட்டுநிதியானது பணி நிறைவடைந்தும் கூட ஒரு மாதகாலத்தினுள் தீர்க்கப் படவில்லை. | பிரயோக ரீதியாக மேலேழுந்த சில நிலைப்பாடுகள் காரணமாக பெற்றுக் கொள்ளப்பட்ட பல்பணி இடைக்கால கட்டுநிதி, ஒரு மாத காலப்பகுதியினுள் தீர்க்கப்படாதிருந்ததுடன் இன்றளவில் இந் நிலைமையை இயன்றளவில் தவிர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பது பற்றியும் அறியத் தருகின்றேன். |
| 09. | மீளாய்வாண்டு தொடர்பாக பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய செயலாற்றுகை அறிக்கை குறித்த திகதியில் சமர்ப்பிக்கப் படவில்லை.. | 2020 ஆண்டில் நிலவிய கொரோனா பெருந்தொற்று நிலை காரணமாகவும், அவ் ஆண்டில் நிறுவனமானது அதிக காலம் மூடப்பட்டிருந்தமை காரணமாகவும் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையைத் தயாரிப்பதற்குத் தேவையான தகவல்களைப் பெற்றுக் கொள்வதிலும் அறிக்கையைத் தயாரித்து அச்சுடுவதிலும் தாமதம் ஏற்பட்டமை பற்றி தயவுடன் அறியத் தருகின்றேன். 2020 ஆண்டின் செயலாற்றுகை அறிக்கை 2021.12.01 இல் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கும் பொருட்டு நேர் அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டது. 2022 ஆண்டிற்கான குறித்த செயலாற்றுகை அறிக்கை தற்போது தயாரிக்கப்பட்டு வருவது பற்றியும், அதனை 150 நாட்களுக்குள் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது பற்றியும் மேலும் அறியத் தருகின்றேன். |
| | இரண்டாவது பகுதி | |
| 01 | திட்டமிடப்பட்ட பயிற்சி வாய்ப்புக்களுக்காக வழங்கப் பட்டிருந்த பயிற்சி வாய்ப்புக்களின் எண்ணிக்கை 50% இனை விட குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | 2020 ஆண்டில் நிலவிய கொரோனா பெருந்தொற்று நிலைக்கு மத்தியில் அலுவலர்கள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் ஈடுபடுத்தப்படவில்லை. எனினும் 2022 ஆண்டில் 05 அத்தியாவசிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் 58 அலுவலர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர் என்பது பற்றி தயவுடன் அறியத் தருகின்றேன். |

..........................................

ஆர்.எம்.சீ.எம். ஹேரத்
செயலாளர்
வனசீவராசிகள் மற்றும் வன வளங்கள்
பாதுகாப்பு அமைச்சு

R.M.C.M. Herath
Secretary
Ministry of Wildlife and
Forest Resources Conservation

..........................................

கலாநிதி திலக் பிரேமரத்ன
பணிப்பாளர் நாயகம்
தேசிய மிருகக்காட்சிகாலைகள்
திணைக்களம்

Dr. Tilak Premakantha
Director General
Department of National Zoological Gard
Anagarika Dharmapala Mawatha,
Dehiwala.